கழக வெளியீடு, ௧௧௩௦




[இரண்டாம் புத்தகம்]

ஆசிரியர்:

N K வேலன்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1963

என். குழந்தைவேலன் (1907)

© 1963 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Ed 1 June 1963

P31,J9(5)
w3K3.2

AYAL NATTUK KATHAIKAL - II

Appar Achakam, Madras - 1.

# பதிப்புரை

அயல்நாட்டுக் கதைகள் என்னும் கழகச் சிறுகதை வரிசையில் இது இரண்டாம் புத்தக மாகும். இளைஞர்க்கேற்ற இனிய கதைகள் பல வற்றை எழுதியுதவிய திரு. என். கே. வேலன் அவர்களே இச் சிறுகதைகளையும் எழுதி யுள்ளார்.

கழகவழி வெளிவந்துள்ள பிற கதை நூல் களைப் போலவே இதனையும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் வாங்கிச் சிறுவர்கள் படித்து மகிழுமாறு செய்வார்களென நம்புகிறோம்.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இடையன் கண்ட கனவு | 1 |
| 2. | அரக்கனும் அரசியும் | 9 |
| 3. | அழகியின் ஆசை | 24 |

# இடையன் கண்ட கனவு



முன் ஒரு காலத்தில் ஆடு மேய்க்கும் பையன் ஒருவன் இருந்தான். அவன் எப்பொழுதும் களிப்புடன் இருப்பான். ஆடு மேய்க்கும்போது பாட்டுப் பாடிக் கொண்டே இருப்பான்.

ஒருநாள் வெயில் நேரத்தில் மரத்தடியில் படுத்து உறங்கினான். அப்பொழுது ஒரு கனவு வந்தது. ஒரு மலைமேல் ஏறுவது போலவும் மலை உச்சியில் அரி ஆசனத்தில் தான் அமர்ந்திருப்பது போலவும் தெரிந்தது. அவன்

அருகில் ஓர் அழகிய பெண் வீற்றிருப்பது போலவும் தன்னுடைய தலையில் பொன்னாலாகிய மகுடம் அணிந்திருப்பது போலவும் தோன்றியது. 'நான் அரசனாகி விட்டேன்' என்று கத்தினான். உறக்கம் கலைந்தது.

மறுநாளும் மாடு மேய்த்துவிட்டு மரத்தடியில் படுத்து உறங்கினான். அதே கனவு மறுபடியும் வந்தது. 'இன்னொரு முறை இந்தக் கனவு வந்தால் நான் கட்டாயம் அரசன் ஆவேன்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

மூன்றாவது நாள் அதே மரத்தடியில் படுத்து உறங்கினான். பழைய கனவு மீண்டும் வந்தது. ஆடுகளை ஓட்டிக்கொண்டு போய்ச் சொந்தக்காரரிடம் ஒப்புவித்தான். மாடு மேய்க்கும் கோலை எடுத்துக்கொண்டு வெளியில் புறப்பட்டான். நாள் முழுவதும் நடந்து மாலை நேரத்தில் ஒரு காட்டிற்கு வந்து சேர்ந்தான். மனிதர்கள் நடமாட்டமே இல்லை. ஒரு குடிசை வீடுகூடக் கண்ணுக்குத் தெரியவில்லை.

புத்ர்களின் நடுவில் படுத்து உறங்கினான். சில மனிதர்கள் உரக்கப் பேசும் குரல் கேட்டு விழித்துப் பார்த்தான். அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் பின்னால் சென்றான். ஒரு வைக்கோல் போர் தெரிந்தது. அதன் பின்னால் ஒளிந்துகொண்டான்.

அவர்கள் பேசிக்கொள்வதிலிருந்து அது ஒரு கள்வர் கூட்டம் என்று தெரிந்தது. கள்வர் தலைவன் மற்றவர்கள் செய்த வேலைகளைப் பற்றிக் கேட்டான். "எனக்கு ஒரு மாயச் சட்டை கிடைத்திருக்கிறது. சட்டைப் பையில் இருக்கும் பணத்தை எடுத்தால் மறுபடியும் சட்டைப் பை நிறைந்து விடுகின்றது' என்று ஒருவன் கூறினான்.

'அருமையான பொருள் தான்' என்று தலைவன் மெச்சிக்கொண்டான்.

'எனக்கு ஒரு தொப்பி கிடைத்தது; அதை வைத்துக்கொண்டு வெடிகுண்டுகள் வீசலாம். எடுக்க எடுக்கக் குண்டுகள் வந்து நிறைகின்றன' என்று இரண்டாவது ஆள் சொன்னான்.

'அற்புதமான வேலைதான்' என்று தலைவன் தட்டிக்கொடுத்தான். மூன்றாவது மனிதனிடம் 'நீ என்ன கொண்டு வந்தாய்?' என்று கேட்டான்.

'எனக்கு ஒரு பட்டாக்கத்தி கிடைத்தது. கத்தியின் முனை தரையில் பட்டால் அந்த இடத்தில் பல வீரர்கள் தோன்றுவார்கள்' என்றான்.

'நல்ல வேலை செய்தாய்' என்று தலைவன் தலையை அசைத்தான். நான்காவது ஆள் அவன் எதிரில் வந்து நின்றான்.

'இந்தச் செருப்புகளை அணிந்து கொண்டு ஓர் அடி எட்டி வைத்தால் ஏழு மைல்களுக்கு அப்பால் செல்லலாம்' என்றான்.

'இதுவும் ஓர் அற்புதம். நீங்கள் எல்லோரும் இன்று நல்ல வேலை செய்திருக்கிறீர்கள். கிடைத்த பொருள்களை எல்லாம் பத்திரமாக எடுத்து வையுங்கள். சற்றுநேரம் படுத்து உறங்கலாம். காலையில் நிறைய வேலை இருக்கிறது' என்று தலைவன் கட்டளை இட்டான்.

எல்லோரும் நன்றாய் உறங்கிய பிறகு இடைப் பையன் மெதுவாக வெளியில் வந்தான். மந்திரச் சட்டையை எடுத்து அணிந்து கொண்டான். தொப்பியை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டான். பட்டாக்கத்தியை இடையில் செருகிக்கொண்டு, புதிய செருப்புகளைக் காலில் அணிந்துகொண்டான்.

மாயச் செருப்புகளின் உதவியால் அடிக்கு ஏழு மைல்கள் பாய்ந்து சென்றான். அந்த நாட்டின் தலைநகருக்கு வந்து சேர்ந்தான். ஒரு சத்திரத்தில் போய்த் தங்கினான். சட்டைப் பையைத் திருப்பினான். பொற்காசுகள் கீழே விழுந்து குவிந்தன. விலை உயர்ந்த ஆடைகளை வாங்கினான். அவைகளை அணிந்து கொண்டு அரண்மனைக்குச் சென்றான். 'அரசனை நேரில் காண வேண்டும்', என்றான்.

அரசனுடைய அருமை மகள் இடைப்பையன் இருக்கும் இடத்திற்கு வந்தாள். அரசனும் அவனிடம் வந்தான்.

'நான் ஒரு பெரிய வீரன். என்னிடம் ஏராளமான சேனைகள் இருக்கின்றன. நான் உங்களுக்கு உதவியாக இருப்பேன்', என்ருன்.



'எனக்கும் ஒரு பெரிய சேனை வேண்டும். பகைவர்கள் சூழ்ந்துகொண்டு தொல்லை கொடுக்கிருர்கள்', என்று அரசன் சொன்ஞன்.

'நான் பகைவர்களை எல்லாம் வென்றுவிடுகிறேன். நான் வெற்றியுடன் திரும்பிஞல் இளவரசியை எனக்கு மணம் செய்து கொடுக்கிறீரா?' என்று கேட்டான்.

மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று நேரம் எண்ணிப்பார்த்தான்.


'நீ வெற்றியுடன் வந்தால் என் மகளைத் தருகிறேன்' என்று அரசன் வாக்களித்தான்.

இடைப்பையன் ஊருக்கு வெளியில் சென்றான். பட்டாக்கத்தியை எடுத்து நிலத்தில் ஊன்றினான். ஏராளமான போர்வீரர்கள் வந்து அணி வகுத்து நின்றனர். அவ்வளவு பெரிய சேனை எந்த நாட்டிலும் பார்க்க முடியாது. அந்தச் சேனையுடன் பகைவர்களை எதிர்த்தான். கடும்போர் நடந்தது. தொப்பியின் உதவியால் வெடிகுண்டுகளை வீசினான். பட்டாக்கத்தியை நிலத்தில் குத்தினால் புதிய சேனைகள் தோன்றின. போர்வீரர்கள் மேலும் மேலும் வந்து சேர்ந்தனர்.

பகைவர்கள் எல்லாம் வீழ்ந்து மடிந்தனர். மீதி இருந்தவர்கள் புறமுதுகு காட்டி ஓடிவிட்டனர். இடைப்பையன் வெற்றியுடன் வீடு திரும்பினான்.

'உம்முடைய பகைவர்களின் சேனைகளைச் சின்னு பின்னம் ஆக்கி விட்டேன்' என்று அரசனிடம் தெரிவித்தான்.

அரசன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். இளவரசியை இடையனுக்கு மணம் செய்து கொடுத்தான். சில ஆண்டுகளுக்குப் பின், அரசன் காலம் ஆனுன். இடையனுக்கு அரச பதவி கிடைத்தது. அவனுடைய கனவு பலித்துவிட்டது.



# அரக்கனும் அரசியும்



ஓர் ஊரில் ஓர் அழகிய இளவரசி இருந்தாள். அவள் மிகவும் நல்லவள். ஒருநாள் அவளுடைய தாதியுடன் ஒரு படகில் ஏறிச் சென்ருள். திடீரென்று புயல்காற்று வந்தது. படகு கவிழ்ந்து விட்டது. படகு ஓட்டுகிறவனும் தாதிப் பெண்ணும் தண்ணீரில் மூழ்கிவிட்டனர். இளவரசி எப்படியோ தப்பிப் பிழைத்தாள். ஒரு சிறிய தீவிற்குப் போய்ச் சேர்ந்தாள்.

அத்தீவில் ஓர் அரக்கனும் அரக்கியும் குடி இருந்தனர். அவர்களுக்கு

ஐந்து குழந்தைகள் இருந்தன. அந்தத் தீவிலிருந்த மனிதர்களை எல்லாம் விழுங்கிவிட்டு வேறு யாராவது வருவார்களா என்று எதிர்பார்த்துக்கொண்டு இருந்தனர். இளவரசி கரை ஓரத்தில் மணலில் மயக்கமாகப் படுத்திருந்தாள். அரக்கன் அவள் அருகில் சென்று பார்த்தான். ஐந்து அரக்கக் குழந்தைகளுக்கும் இன்று நல்ல உணவு கொடுக்கலாம் என்று எண்ணினான்.

ஆனால் இளவரசி மிகவும் அழகாக இருந்தாள். சிவந்த கன்னங்கள். சுருண்ட முடி. மிகவும் சிறிய பெண். அவளைக் கொல்ல அரக்கனுக்கு மனம் வரவில்லை. அரக்கியும் அங்கே வந்து பார்த்தாள். இளவரசியைத் தூக்கிக் கொண்டுபோய்த் தன் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொம்மையாகக் கொடுத்தார்கள்.

'எவ்வளவு அழகான குழந்தை. அவளை வளர்த்துப் பெரியவளாக்கி நம் மூத்தமகனுக்கு மணம் செய்து கொடுக்கலாம்', என்று கணவனிடம் கூறினாள்.

இளவரசி அரக்கனுடைய வீட்டில் வசித்து வந்தாள். ஐந்து அரக்கக் குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டு இருந்தாள். அவளுக்குப் பதினறு வயது ஆயிற்று. அரக்கி தன் மூத்த மகனுக்கு அவளை மணம் செய்துவைப் பதற்கு ஏற்பாடு செய்திருந்தாள். இள வரசிக்கு அவனைப் பிடிக்கவில்லை. அவன் முரடனுகவும் மூர்க்கனுகவும் இருந் தான். அவனுடைய உருவமும் அவ ளுக்குப் பிடிக்கவில்லை.

ஒருநாள் இளவரசி கடற்கரையின் ஓரமாக உலவிக்கொண்டிருந்தாள். கட லில் ஒரு மனிதன் பாறையைப் பிடித் துத் தொங்கிக் கொண்டிருந்தான். கரைக்கு வருவதற்கு முயற்சி செய்து பார்த்தான். அவனுல் முடியவில்லை. கரையிலிருந்து அவன் சற்றுத் தொலை வில் இருந்ததால் இளவரசியால் அவ னுக்கு உதவி செய்ய முடியவில்லை. கரை ஓரத்தில் நின்று அவனைப் பார்த் துக்கொண்டிருந்தாள். அவன் மிகவும் அழகாய் இருந்தான்.

சற்று நேரத்தில் ஒரு பெரிய அலை வந்தது. அந்த அலையில் அடித்துப் புரண்டு கரைக்கு வந்து சேர்ந்தான். மணலில் உருண்டுகொண்டு வந்து இளவரசியின் காலடியில் வீழ்ந்தான். இறந்தவன் போல் அசைவற்றுக் கிடந்தான். சிறிதுநேரம் கழித்துக் கண்களைத் திறந்து பார்த்தான். அவன் அருகில் ஓர்



அழகிய பெண் நிற்பதைக் கண்டான். மான் விழிகள். புலித்தோலினால் ஆகிய ஆடை அணிந்திருந்தாள்.

கடலிலிருந்து தப்பிய வாலிபனும் ஓர் இளவரசன்தான். அவன் ஏறிவந்த கப்பல் புயல்காற்றினால் கடலில் மூழ்கி

யது. இளவரசன் மிகவும் துன்பப்பட்டு எப்படியோ கரைக்கு வந்து சேர்ந்தான். அவன் இளவரசியுடன் பேசிப் பார்த்தான். அவள் பேசிய வார்த்தை ஒன்றும் விளங்கவில்லை. அவன் பேசியது அவளுக்குத் தெரியவில்லை. அரக்கர்கள் பேசும் மொழிதான் அவளுக்குத் தெரியும். அது தமிழ்மொழி போல் இனிமையாக இல்லை. கரடுமுரடாக இருந்தது.

இருவரும் சைகையினுல் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்துக் கொண்டனர். நெடுநேரம் ஒன்ருக உட்கார்ந்திருந்தனர். அரக்கன் வந்தால் இளவரசனைக் கொன்று தின்றுவிடுவானே என்ன செய்வது என்று வருத்தம் அடைந்தாள். 'உடனே இந்த இடத்தை விட்டு ஓடிவிடு' என்று சைகை காட்டினுள். அது அவனுக்கு விளங்கவில்லை. இளவரசி அழத்தொடங்கினுள். அவன் இருந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

அவன் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போய் ஒரு குகைக்குள் மறைத்து வைத்தாள். அந்தக் குகையை

அழகிய வீடாக மாற்றி வைத்தாள். கிழிஞ்சல்கள், மலர்கள், இறகுகள் முதலியவற்றினால் அதை அழகுபடுத்தினாள்.

சைகை காட்டி இளவரசனை உட்காரும்படி செய்தாள். 'குகைக்குள்ளேயே இருக்கவேண்டும், வெளியில் போகக்கூடாது' என்று எச்சரிக்கை செய்தாள். வீட்டிற்குப் போய் உணவும் தண்ணீரும் கொண்டுவந்து கொடுத்தாள். பழங்களைப் பறித்துக் கொண்டு வந்து கொடுத்தாள். பெரிய சங்குகளில் தண்ணீர் எடுத்து வந்தாள்.

இளவரசன் பழங்களைத் தின்று பசி ஆறினான். புன்சிரிப்பினால் தன் நன்றியைத் தெரிவித்தான். இரண்டு நாட்களாக உணவு இல்லாமல் பட்டினியாக இருந்தவனுக்கு அழகியின் கையினால் அமுது கிடைத்தது. பொழுது சாய்ந்தவுடன் இளவரசி வீட்டிற்குப் போனாள். 'வெளியில் தலை காட்டக் கூடாது' என்று மீண்டும் எச்சரிக்கை செய்துவிட்டுப் போனாள். 'நாளைக்கு வருகிறேன்', என்று வாக்களித்தாள்.

இளவரசன் இரண்டு நாட்கள் குகைக்குள்ளேயே இருந்தான். இளவரசி அவனுக்கு உணவும் தண்ணீரும் கொண்டுவந்து கொடுத்தாள். அரக்கர்களுக்குத் தெரியாமல் அவள் வருவது வழக்கம். இருவரும் சில வார்த்தைகள் பேசக் கற்றுக்கொண்டனர்.

மூன்ருவது நாள் இளவரசி தேம்பிக்கொண்டு வந்தாள். 'என்ன நேர்ந்தது?' என்று இளவரசன் கேட்டான். 'திருமணம் வந்துவிட்டது. நாளைக்கு அரக்கன் மகனைக் கட்டிக்கொள்ள வேண்டுமாம்', என்று அழுதாள்.

'எனக்குக் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை. அதைவிட இறந்து போவது மேல்', என்ருள்.

'என்னுடன் வந்துவிடு. எங்கள் ஊருக்கு உன்னை அழைத்துச் செல்கிறேன்', என்று இளவரசன் கூறிஞன்.

'அப்படியாளுல் சரி, இன்று இரவு நிலவு வந்ததும் புறப்படலாம்'; என்ருள்.

இரவு வந்ததும் அரக்கியின் அருகில் படுத்துக்கொண்டாள். அரக்கி

குறட்டை விட்டுக்கொண்டு நன்ருய் உறங்கிஞள். மற்றவர்களும் உறங்கி விட்டார்கள். இளவரசி மெதுவாய் எழுந்து வெளியில் வந்தாள். அரக்க னுடைய ஒட்டகத்தின் மேல் ஏறிக் கொண்டு இளவரசன் இருக்கும் குகைக் குச் சென்ருள். நிலவு தென்னைமரம் உயரத்திற்கு வந்திருந்தது. இளவரச னும் இளவரசியும் ஒட்டகத்தின்மேல் ஏறிக்கொண்டு அந்த இடத்தைவிட்டு நெடுந்தூரம் சென்றனர்.

விடியற்காலையில் அரக்கி விழித்து எழுந்தாள். பக்கத்தில் படுத்திருந்த இளவரசியைக் காணவில்லை. உடனே அடுத்த குகைக்குச் சென்று தன் கணவனை எழுப்பிஞள்.

'இளவரசி ஓடிவிட்டாள், எங்கேயோ போய்விட்டாள்', என்று ஓலமிட்டாள்.

'மந்திரச்செருப்பைஎடு', என்ருன். அதைக் காலில் போட்டுக்கொண்டு அடிக்கு ஏழு மைல் பாய்ந்து சென்ருன். அவன் பின்ஞல் ஓடிவருவது இடி

இடிப்பது போல் கேட்டது. அரக்கனிடமிருந்து எப்படித் தப்புவது என்று தெரியவில்லை.

'என்ன செய்யலாம்?' என்று இளவரசன் கேட்டான்.

'என்னிடம் ஒரு மந்திரக்கோல் இருக்கிறது. அது நமக்கு உதவி செய்யுமா பார்க்கலாம்', என்ருள். மந்திரக் கோலினுல் ஒட்டகத்தைத் தட்டினுள். ஒட்டகம் ஒரு குளமாக மாறிவிட்டது. இளவரசர் ஒரு படகுபோல் ஆனுர். இளவரசி ஒரு கிழவியாக மாறினுள்.

அரக்கன் குளக்கரைக்கு வந்து சேர்ந்தான். கிழவியைக் கூப்பிட்டான். 'ஒரு வாலிபனும் ஒரு பெண்ணும் ஒட்டகத்தில் ஏறிக்கொண்டு வந்தார்கள்; அவர்களைப் பார்த்தாயா?' என்று கேட்டான்.

'ஆம், நான் பார்த்தேன்; எதிரில் இருக்கும் மலேயின் ஓரமாய்ச் சென்ருர்கள்', என்ருள்.

அரக்கன் அத்திசையை நோக்கி விரைந்து சென்ருன். கிழவிபோல்

நடித்த இளவரசி மந்திரக்கோலினால் படகின்மேல் தட்டினாள். இளவரசனுக்குப் பழைய வடிவம் வந்தது. குளம் ஒட்டகமாக ஆய்விட்டது. இருவரும் ஒட்டகத்தின்மேல் ஏறிக்கொண்டு கடற்கரையை நோக்கிச் சென்றனர். அரக்கன் காடு மலை எல்லாம் சுற்றி அலைந்தான். இளவரசியைக் கண்டு பிடிக்க முடியாமல் வீடு திரும்பினான்.

'அவள் அகப்படவில்லையா?' என்று அரக்கி கேட்டாள்.

'எல்லா இடங்களிலும் சுற்றிப் பார்த்துவிட்டேன். ஒரு கிழவி படகு ஓட்டிச் சென்றாள். அவள் காட்டிய மலைகளிலும் தேடிப் பார்த்தேன். போன இடம் தெரியவில்லை', என்றான்.

'இளவரசி ஒருவேளை கிழவி வேடம் போட்டிருப்பாள். நமது மந்திரக் கோலை எடுத்துக்கொண்டு போயிருக்கிறாள். அதன் உதவியால் வடிவத்தை மாற்றி இருப்பாள். உன்னால் அவளைப் பிடிக்க முடியாவிட்டால் நான் கண்டு பிடிக்கிறேன் பார்', என்று புறப்பட்

டாள். அரக்கனிடம் இருந்த மந்திரச் செருப்பை வாங்கிக் காலில் அணிந்து கொண்டாள்.

மலைகளின் பக்கம் போகாமல் எதிர்ப்புறத்தில் சென்றாள். ஓர் அடி எடுத்து வைத்தாள். மந்திரச்செருப்பு ஏழு மைலுக்கு அப்பால் அவளைத் தூக்கிச் சென்றது. சிறிது நேரத்தில் ஒட்டகத்திற்குப் பின்னால் வந்துவிட்டாள். இளவரசி அரக்கி வருவதைப் பார்த்து விட்டாள்.

'நாம் உருவத்தை மாற்றாவிட்டால் தப்பமுடியாது. அரக்கி மிகவும் பொல்லாதவள்', என்று மந்திரக்கோலை எடுத்து ஒட்டகத்தைத் தட்டினாள். ஒட்டகம் பூந்தொட்டியாகி விட்டது. இளவரசன் பூஞ்செடியாக நின்றான். இளவரசி தேனீயாக மாறிப் பூக்களைச் சுற்றிச் சுற்றி வந்தாள். அரக்கி களைத்துப்போய்ப் பூஞ்செடியின் அருகில் உட்கார்ந்தாள். தேனீ அவளை இரண்டு மூன்று இடங்களில் கொட்டிவிட்டது. 'இதென்ன தொந்தரவு?' என்று அரக்கி அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

மீண்டும் பழைய வடிவத்தை அடைவதற்குள் மந்திரக்கோல் காணுமற் போய்விட்டது. அந்த வழியாக ஒரு பையன் வந்தான். கீழே கிடந்த கோலை எடுத்துக்கொண்டு போய்விட்டான். இளவரசிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வாழ்நாள் முழுவதும் செடியாகவும் தேனீயாகவும் காலம் கழிப்பதா? ஒருவரோடு ஒருவர் பேசமுடிந்தது. ஆனுல் பழைய உருவம் மட்டும் வரவில்லை.

ஒருநாள் ஒரு வனதேவதை அந்த வழியாக வந்தது. பூஞ்செடியை உற்றுப் பார்த்தது. அதற்கு முன் அந்த இடத்தில் அதுபோன்ற செடியை அது பார்த்ததில்லை. கீழே குனிந்து செடியை முகர்ந்து பார்த்தது. பால்மணம் வீசியது. ஏதோ மந்திர சக்தியினுல் இந்தச் செடி தோன்றி இருக்கிறது என்று தேவதை எண்ணிற்று.

தேவதை மற்ருெரு மந்திரக்கோலை எடுத்து மூன்று முறை செடியின்மேல் தட்டிற்று. செடி மறைந்து விட்டது. அந்த இடத்தில் இளவரசன் நின்ருன்.

'உன்னைச் செடியாக மாற்றியது யார்?' என்று தேவதை இளவரசனைக் கேட்டது.

'இதோ பறக்கிறதே இந்தத் தேனீ ஓர் இளவரசியாக இருந்தது. அதற்கும் தாங்கள் பழைய உருவத்தைக் கொடுக்க வேண்டும்', என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

வனதேவதை தேனீயை மீண்டும் இளவரசியாக மாற்றிக் கொடுத்தது.

'நீங்கள் இருவரும் எங்கே செல்கிறீர்கள்' என்று கேட்டது.

'இவளை என்னுடைய நாட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். இந்தப் பெண்தான் என் உயிரைக் காப்பாற்றினாள். இவளையே நான் மணந்துகொள்ளப் போகிறேன்' என்று இளவரசன் கூறினான்.

'என் பெற்றோர் யார் என்று எனக்குத் தெரியாது. குழந்தைப் பருவம் முதல் ஓர் அரக்கன் வீட்டில் வளர்ந்து வந்தேன். அரச குடும்பத்தைச் சேர்ந்த


வரை நான் எப்படி மணக்க முடியும்?' என்று அந்தப் பெண் கூறினாள்.

'நீ யார் என்று எனக்குத் தெரியும். நீயும் ஓர் அரசனுடைய மகள்தான். உன் தாய் தந்தையர் உன்னைத் தேடிக் கொண்டு இருக்கின்றனர்', என்று தேவதை கூறிற்று. அவளுடைய தந்தையின் பெயர், ஊர் முதலியவை களை எடுத்துச் சொல்லிற்று.


'உன் தந்தை எங்கள் அரசருக்கு நெருங்கிய நண்பர் ஆயிற்றே! நாங்கள் எல்லோரும் உன்னைத் தேடிக்கொண் டிருந்தோம்', என்று இளவரசன் இள வரசியிடம் தெரிவித்தான்.

'நீங்கள் இருவரும் இறந்துபோய் விட்டீர்கள் என்று உங்களுடைய தாய் தந்தையர்கள் புலம்பிக்கொண்டு இருக் கின்றனர். உங்களை இப்பொழுதே வீட் டிற்கு அனுப்புகிறேன்', என்று தேவதை சொல்லிற்று. அவர்களுக்குப் பறக்கும் விமானம் ஒன்று கொண்டுவந்து கொடுத்தது.

இருவரும் விமானத்தில் ஏறிப் பறந்து சென்றனர். ஊருக்குப் போய்ச் சேர்ந்தவுடன் எல்லோரும் அன்புடன் வரவேற்றனர். இறந்து போனவர்கள் பிழைத்து எழுந்தது போல் தோன்றியது. இளவரசனுக்கும் இளவரசிக்கும் திருமணம் மிகவும் சிறப்புடன் நடந்தது.



# அழகியின் ஆசை



ஓர் ஊரில் ஓர் ஏழைப்பெண் இருந்தாள். அவளுக்கு ஓர் அழகிய பெண் குழந்தை பிறந்தது. அதற்கு வடிவழகி எனப் பெயரிட்டு அழைத்தாள். அக் குழந்தை எல்லோரிடத்திலும் அன்போடு பழகும்.

ஒரு நாள் அக் குழந்தை குடிசையின்முன் விளையாடிக்கொண்டு இருந்தது. அந்த வழியாக ஒரு பணக்கார அம்மாள் வந்தாள். அந்த அம்மாளுக்குக் குழந்தைகளே கிடையாது. வடிவழகியைக் கண்டு ஆசைப்பட்டாள். தன் வீட்டிற்குக் கொண்டுபோய் வளர்க்க

வேண்டும் என்று எண்ணம் கொண்டாள்.

வடிவழகியின் அம்மாவை அழைத்தாள். 'உன் குழந்தையை என்னோடு அனுப்புகின்றாயா? அவளை என் குழந்தையைப் போல் பார்த்துக்கொள்கிறேன்', என்று கேட்டாள்.

வடிவழகியின் தாய் வறுமையில் வாடிக்கொண்டு இருந்தாள். குழந்தை யாவது சுகமாக இருக்கட்டும் என்று எண்ணி அதைப் பணக்கார அம்மாளுடன் அனுப்பிக் கொடுத்தாள். ஆனால் கன்றை விட்டுப் பிரிந்த பசுவைப்போல் கதறி அழுதாள்.

வடிவழகி சிறிய குழந்தையாக இருந்ததால் நாளடைவில் தன் தாயை மறந்துவிட்டாள். பணக்கார அம்மாளைத் தாய்போல் கருதி வந்தாள். ஒரு பெரிய மாளிகையில் இன்பமாகக் காலம் கழித்து வந்தாள். அவளுக்கு உடுப்பதற்கு நல்ல துணிகளும், விளையாடுவதற்கு நல்ல பொம்மைகளும் உண்பதற்கு நல்ல உணவுகளும் கிடைத்தன. பணக்

கார அம்மாள் அவளை அன்புடன் ஆதரித்து வந்தாள். ஆனால் ஒரே ஒரு கட்டுப்பாடுமட்டும் இருந்தது. வீட்டிற்குள் ஒரு மூலையில் மூன்று அறைகள் இருந்தன. அறைகளின் கதவுகள் எப்போதும் மூடப்பட்டிருந்தன. வடிவழகி அந்த அறைகளுக்குள் போகக் கூடாது என்று அந்த அம்மாள் எச்சரிக்கைசெய்து வைத்திருந்தாள்.

அழகி அந்த அறைகளின் பக்கத்தில் போய் விளையாடுவாள். 'அறைக்குள் என்ன இருக்கும்? கதவை ஏன் திறக்கக்கூடாது? என்று எண்ணுவாள். 'ஒருவேளை பேய் பிசாசு ஏதேனும் இருக்குமோ?' என்று நினைத்தாள்.

நாட்களும் ஓடிவிட்டன. பல ஆண்டுகள் கழிந்தன. வடிவழகியும் வளர்ந்து பெரிய பெண் ஆகிவிட்டாள். அழகில் சிறந்து விளங்கினாள்.

ஒருநாள் பணக்கார அம்மாள் அவளை அருகில் அழைத்தாள். 'நான் வெளியே போகிறேன். பொழுது சாயும் நேரத்திற்குத் திரும்பி வருவேன்.


நல்ல பெண்ணாக நடந்துகொள்ள வேண்டும். அந்த அறைகளுக்குள் போகக் கூடாது,' என்று எச்சரிக்கை செய்தாள்.

வடிவழகி 'தங்கள் சொற்படி நடப்பேன்,' என்று வாக்களித்தாள். உண்மையாகவே அப்படி நடக்கவேண்டும் என்று தான் நினைத்தாள். ஆனால் சிறிதுநேரம் கழித்து மெதுவாக அறைகளின் பக்கம் சென்றாள். 'அறைக்குள் மந்திரமோ மாயமோ இருக்கிறது. திறந்து பார்த்தால் என்ன?' என்று நினைத்தாள்.

முதல் கதவிற்கு அருகில் சென்றாள். 'திறந்துதான் பார்க்கலாமே! எட்டிப் பார்த்தால் போகிறது. உள்ளே போக வேண்டியதில்லை,' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள். கதவின் மேல் கையை வைத்தாள். கதவு திறந்து கொண்டது. உள்ளே எட்டிப் பார்த்தாள். கண்ணை மூடித் திறப்பதற்குள் உள்ளே இருந்து ஒரு நட்சத்திரம் பறந்து சென்றது.

அழகி நடுங்கிப்போய் விட்டாள். கதவைப் படார் என்று மூடினாள்.

உள்ளே இருந்த நட்சத்திரம் மாயமாய் மறைந்துபோய் விட்டது. அதைப் பிடித்து அறைக்குள் அடைப்பதற்கு அவளால் முடியவில்லை.



பணக்கார அம்மாள் அன்று இரவு வீட்டிற்குத் திரும்பி வந்தாள். நட்சத்திரத்தைக் காணவில்லை. அவள் கடுங் கோபம் அடைந்தாள். அழகியை அழைத்தாள். 'உன்னை வெளியில் துரத்திவிடுகிறேன் பார்,' என்றாள்.

'வேண்டாம் வேண்டாம். நான் இனிமேல் நல்லவளாக நடக்கிறேன். என்னை அனுப்பவேண்டாம்,' என்று

கெஞ்சினாள். பணக்கார அம்மாள் அவளை மன்னித்துவிட்டாள்.

சில நாட்களுக்குப் பிறகு அந்த அம்மாள் வெளியூருக்குப் போக நேர்ந்தது. அழகி பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். அவளுடைய கெட்ட குணம் போகவில்லை. ஓட்டமாக ஓடி இரண்டாவது அறையின் கதவைத் திறந்தாள். உள்ளே இருந்த நிலவு ஓட்டம் பிடித்தது. வானத்தை நோக்கிப் பறந்து சென்றது. ஊரிலுள்ள மக்கள் எல்லாம் அந்த வேடிக்கையைப் பார்த்தார்கள்.

அழகி வருத்தப்பட்டாள். 'இனி மேல் என்ன செய்யமுடியும்? கதவைத் திறந்தது என் குற்றம்', என்று பெருமூச்சு விட்டாள்.

பணக்கார அம்மாள் வீட்டிற்குத் திரும்பி வந்தாள். மிகவும் கோபம் அடைந்தாள். 'உலகத்திற்கே கெடுதல் வரும்போல் இருக்கிறது. உன் விளையாட்டே வினையாக முடிந்துவிடும். இப்படிச் செய்தால் உன்னை வீட்டில்

வைக்க முடியாது,' என்று எச்சரிக்கை செய்தாள்.

அழகி மீண்டும் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். 'இன்னும் ஒருமுறை பார்க்கலாம். மறுபடியும் என் உத்தரவை மீறினால் நீ போகவேண்டியது தான்', என்று கூறினாள்.

இதற்குப் பின் அழகி ஒழுங்காகவே நடந்துகொண்டாள். அறைகளின் பக்கமே அவள் போவதில்லை. ஒருநாள் அந்த அம்மாள் வெளியில் போயிருந்தாள். மழை பெய்துகொண்டிருந்தது. அழகிக்குப் பொழுது போகவில்லை. 'நான் பெரிய பெண் ஆகிவிட்டேன். அறைக்குள்ளிருந்து ஏதேனும் ஓடினால் என்னால் பிடித்துக்கொள்ள முடியும். மூன்றாவது அறையைத் திறந்து பார்க்கலாம்', என்று எண்ணினாள்.

சந்தடி இல்லாமல் மூன்றாவது அறைக்குச் சென்றாள். மெதுவாகக் கதவைத் திறந்தாள். அங்கே தோன்றிய ஒளியில் அவளுடைய கண்கள் மங்கிப்போய் விட்டன. உள்ளே

இருந்த சூரியன் ஓட்டம் பிடித்தான். அழகி மயக்கம் அடைந்து கீழே சாய்ந்தாள்.

மயக்கம் தெளிந்து எழுந்து பார்த்தாள். சூரியனைக் காணவில்லை. தேம்பித் தேம்பி அழுதாள். அழுவதால் என்ன பயன்? சூரியன் வானத்தை அடைந்துவிட்டான். சூரியனைத் திருப்பிக் கொண்டுவர அழகியால் முடியவில்லை.

பணக்கார அம்மாள் வீட்டிற்கு வந்தாள். அழகியைப் பிடித்து வீட்டிற்கு வெளியே தள்ளினாள். 'இனிமேல் உங்கள் சொற்படி நடக்கிறேன். ஒரு தவறும் செய்யமாட்டேன்,' என்று அழகி அழுதாள்.

'உன் வாக்குறுதியை நம்பவே முடியாது. என் முன் நிற்காதே! போய் விடு,' என்று உத்தரவிட்டாள்.

'நீ உன் ஆசையை அடக்குவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். பெரியவர்கள் சொற்படி நடக்கவேண்டும். அது வரையில் நீ ஊமையாகப் போகவேண்டும். அல்லது உன் அழகை இழக்க

வேண்டும்', என்று சாபமிட்டாள். 'இந்த இரண்டு சாபங்களில் எது வேண்டும்,' என்று கேட்டாள்.

'நான் ஊமையாகி விடுகிறேன்', என்று அழுதுகொண்டே சொன்னாள். அவளுடைய அழகை இழப்பதற்கு அவள் விரும்பவில்லை.

அழகி ஒரு காட்டிற்குச் சென்று தனியாக வசித்து வந்தாள். காய் கனி கிழங்குகளை உண்டு மரத்தடியில் படுத்து உறங்கினாள். மனம் போனபடி நடக்காமல் ஒழுங்காகக் காலம் கழித்துவந்தாள். அவளுக்குப் பேச முடியவில்லை. தான் செய்த குற்றங்களை எல்லாம் எண்ணி எண்ணி ஏங்கினாள். அவளுடைய குணம் திருந்திவிட்டது. அவளுடைய அழகிற்கு ஏற்ப நற்குணமுடையவளாக இருந்தாள். சாபமும் நீங்கியதால் ஊமை மாறிவிட்டது. ஆனால் அழகிக்கு அது தெரியவில்லை. ஊமையாகவே இருப்பதாக எண்ணிக்கொண்டிருந்தாள்.

ஒருநாள் அவள் குளக்கரையில் ஒரு மரத்தின் மேல் ஏறி அதன் கிளையில்

படுத்து உறங்கினாள். அதன் அருகாமையில் ஓர் அரண்மனை இருந்தது. விடியற்காலையில் அரண்மனையிலிருந்து ஒரு தாதிப்பெண் குடத்தில் தண்ணீர் எடுக்க வந்தாள்.

அழகியின் முகம் தண்ணீரில் தெரிந்தது. 'நிழலில் தெரிவது என்னுடைய முகமா? நான் இவ்வளவு அழகாய் இருக்கிறேனே', என்று தாதி நினைத்தாள். தன் அழகைத் தண்ணீரில் பார்த்துப் பார்த்துப் பெருமை அடைந்தாள். தன்னையும் மறந்து குடத்தைத் தண்ணீரில் போட்டுவிட்டாள். முடிவில் தண்ணீர் எடுக்காமல் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

மற்றொரு தாதி தண்ணீர் எடுக்க வந்தாள். அழகியின் முகத்தைத் தண்ணீரில் கண்டாள். தன்னுடைய முகம் என்று எண்ணிக்கொண்டாள். தண்ணீர்க் குடத்தை வீசி எறிந்தாள். 'நான் இவ்வளவு அழகாய் இருக்கிறேனே! நான் எதற்குத் தண்ணீர் சுமக்கவேண்டும்? இளவரசருக்குக்கூடத் தண்ணீர்

எடுக்கவேண்டியதில்லை. அவர்தாம் என்னிடம் வந்து கொஞ்சவேண்டும்', என்று பெருமை பேசிக்கொண்டாள்.

இளவரசருக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. தாதிப் பெண்களும் திரும்பிவரவில்லை. இளவரசரே குளத்தங்கரைக்கு வந்து சேர்ந்தார்.

அழகியின் முகம் தண்ணீரில் தெரிந்தது. மரத்தின்மேல் உறங்கும் அழகியைப் பார்த்தார். கைதட்டி அழைத்தார். கீழே இறங்கிவரும்படி வேண்டிக் கொண்டார்.

அழகி மெதுவாக இறங்கிவந்தாள். அவள் பேசுவதற்கு முயற்சி செய்யவில்லை. இளவரசரின் எதிரில் நாணத்துடன் நின்றாள், அவள் மிகவும் அழகாக இருந்ததால் இளவரசர் அவளை மணம் செய்துகொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

'என்னுடன் வந்துவிடு, நீ அரசியாக இருக்கலாம்', என்றார்.

அழகி பேசுவதற்கு வாய் எடுத்தாள். உடனே பேச்சு வந்துவிட்டது,

'நான் நல்ல பெண் அல்ல, நான் நல்லபெண் ஆகும்வரையில் தனிமையாக இருக்கவேண்டும்', என்று தன் கதையைச் சொன்னாள்.

'நீ இப்பொழுது நன்றாய்ப் பேசுகிறாய். ஊமை போய்விட்டது அதிலிருந்து நீ நல்ல பெண் என்று தெரியவில்லையா? என்று இளவரசர் கேட்டார.

'எனக்குப் பேசத் தெரிந்துவிட்டது. தங்களிடம் பேசிக்கொண்டிருந்ததுகூட எனக்குத் தெரியவில்லை. என்னையே மறந்துவிட்டேன். கடவுள் என்னைக் காப்பாற்றினார்,' என்று கை கொட்டிச் சிரித்து மகிழ்ந்தாள்.

இளவரசர் அழகியை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். திருமணம் சிறப்பாக நடைபெற்றது. அழகி இன்பமாக வாழ்க்கை நடத்தினாள். அவள் இரண்டு பாடங்கள் கற்றுக் கொண்டாள். ஒன்று மற்றவர்களுடைய காரியத்தில் தலையிடக்கூடாது. மற்றொன்று: சொன்ன சொல் தவறக் கூடாது.